இதை மத்திய அரசுதான் செய்ய வேண்டும். இந்த இந்த அள விற்கு பார்டர் கரையுள்ள துணிகளை கைத்தறி நெசவாளர்களுக்கு தான் ஒதுக்கித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை எப்படி அமல்படுத்துவது என்பதைப்பற்றி யோசனை செய்யப்பட்டு வரு கிறது. மராட்டிய, குஜராத் மாநிலங்களில் விசைத் தறிகள் ஏரா ளமாக இருக்கிற காரணத்தால் அவர்கள் கவலைப்படவில்லை. விசைத்தறிகள் இல்லாத காரணத்தால் விசைத்தறிகளைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. நம்முடைய நாட்டிலேயுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதகம் ஏற்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் அந்த உத்தரவு நம் நாட்டைப் பொறுத்தவரையில் செயல்படாமல் இருக்கிறது. எந்த அளவிற்கு இந்த உத்தரவை நம் கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதகம் இல்லாமல் அமல் நடத்த முடியுமோ, அந்த அளவிற்கு நடத்த வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம்.

திருச்சிராப்பள்ளி மத்திய சிறையிலுள்ள நூலகம்

* வினா 84—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மத்திய சிறையில் உள்ள நூலகம் சிறைக் கைதி களுக்குப் பயன்படும் வகையில் செயல்படுத்தப்படுகிறதா?

(இ) ஆம் எனில், சிறையில் உள்ள கைதிகள் எவ்வெப் பொழுது நூல்களைப் படிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி மத்திய சிறைச்சாலையிலுள்ள கைதி களின் பயனுக்காக அச் சிறைச்சாலையிலுள்ள நூலகம் பேணிவரப் படுகிறது. கைதிகள், தங்கள் ஓய்வு நேரங்களிலும், இரவில் தங்கு மிடங்களில் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் விடுமுறை நாட்களிலும் புத்தகங்கள் படிப்பதற்கு அனுமதியளிக் கப்படுகிறது. சிறைச்சாலைப் பள்ளி செயல்படும் நேரங்களில், அதாவது காலை 8 மணி முதல் 11-30 மணி வரையிலும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 4-30 மணி வரையிலும் சிறைச்சாலை நூலகத்தி லிருந்து புத்தகங்கள் எடுத்துச் செல்லவும் அவர்கள் அனுமதிக்கப் படுகின்றனர்.

திரு. ஆர். நாகசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நூலக ஆணைக் குழுவின் கிளை ஒன்றை மத்திய சிறைச்சாலையில் நிறுவி அங்கு கைதிகளுக்கு எல்லாவிதமான புத்தகங்களும் கிடைக்க வழி செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இப்போது நாமே செய்து வருகிறோம்.

திரு. என். கிட்டப்பா: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலையில் உள்ளதைப்போல கிளைச் சிறைச்சாலைகளிலும் நூலகம் துவக்க அரசு முன்வருமா?

1970 ஜனவரி 27]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அந்த விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சிறையில் மட்டுமல்ல, எல்லாச் சிறைச்சாலைகளிலும் இருக்கிற புத்தகங்கள் பழைய கால புத்தகங்களாக இருக்கின்றன. இந்த காலத்திற்கேற்ற கருத்துக்கள் அடங்கிய புத்தகங்களை வைப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, புத்தகங்களை அவ்வப்பொழுது தேவையை உத்தேசித்து வாங்கிக் கொடுக்கிறோம். சிலவற்றை மாவட்ட நூலகத்திலேயிருந்து பெற்று நாம் கொடுத்து வருகிறோம்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பகல் நேரத்தில் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மாலை ஆறு மணிக்குப் பிறகு இரவு நேரத்தைப் பயனுள்ள முறையில் கழிக்க, இரவு நேரங்களில் புத்தகங்கள் கொடுப்பதற்கு வசதிகள் செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, பகல் நேரத்தில் வாங்குகிற புத்தகங்களையே இரவு நேரங்களில் வைத்துக் கொள்ளலாம்.

THIRU T. MARTIN: Sir, the prisoners in this State are classified as A, B and C class prisoners. May I request the Hon. Minister to state whether prisoners belonging to 'C' class are allowed to have access to these libraries?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: புத்தகங்கள் கொடுப்பதைப் பொறுத்த அளவுக்கு பாகுபாடு இருப்பதாக நான் கருதவில்லை. எனக்குத் தெரிந்தவரையில் சி கிளாஸ் கைதிகளில் சிலர் படித்துப் பட்டம் பெறக்கூடிய அளவுக்கு முன்னேறி வருகிறார்கள் என்கிற தகவல் என்னிடத்தில் இருக்கிறது.

திரு. எம். எஸ். மணி: திருச்சி மத்திய சிறையில் இருக்கிற நூலகத்தில் இராமாயணம், மகாபாரதம் போன்ற புத்தகங்கள் இருக்கிறதே தவிர அரசியல் கருத்துப் புத்தகங்கள் அல்லது அரசியல் தலைவர்கள் எழுதிய இலக்கிய புத்தகங்கள் இல்லை. இவற்றை வாங்கி வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எனக்குத் தெரிந்த வரையில் வித்வான் பட்டம் பெறக்கூடிய அளவுக்கு படிக்கத்தக்க புத்தகங்கள் கிடைக்கின்றன. கனம் அங்கத்தினர் மேலும் என்ன என்ன புத்தகங்கள் தேவை என்று எழுதுவார்களானால் அதையும் வாங்க ஏற்பாடு செய்யலாம்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: தினசரிப் பத்திரிகைகள் கொடுக்கும்போது சில செய்திகளை கறுப்பு மையினால் தடவி அனுப்புகிறார்கள். மாலையில் போகிறவர்கள் அந்தச் செய்தியை உள்ளே இருப்பவர்களிடம் சொல்லி விடுகிறார்களே, ஆகவே இனி மேலே மை பூசாமல் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறையில் இருக்கும்போது எனக்குத் தரப்பட்ட பத்திரிகைகளில்கூட அப்படி மை அடித்துத் தந்தார்கள். வெளியில் நடக்கும் அரசியல் நிகழ்ச்சிகள் அரசியல் கைதிகளுக்குத் தெரியக்கூடாது என்பதற்காகவே அப்படித் தருவதாகச் சொன்னார்கள். பொதுவாக சிறைக்குள் சட்டம், அமைதி, ஒழுங்கைக் குலைக்கக்கூடிய செய்திகள் எதுவும் சிறையினுள் இருப்பவர்களுக்குத் தெரியாது இருக்கவேண்டும் என்பதற்காக அந்த ஏற்பாடு.

திரு. மு. ச. சிவசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பகலில் வாங்கிய புத்தகத்தை இரவில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். நான் சிறையில் இருந்தபோது 8 மணிக்கெல்லாம் விளக்கை அணைத்துவிடும்படியாகச் சொன்னார்கள். அது போலத்தான் இப்போதும் 8 மணிக்கெல்லாம் விளக்கை அணைக்க கட்டாயப்படுத்தப்படுகிறார்களா? எல்லா நேரமும் விளக்கை அனுமதிக்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிச்சயம் படித்து முன்னேற வேண்டுமென்று கருதுகிறவர்களுக்கு விளக்கு வசதி கொடுக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

திரு. கே. விநாயகம் : சிறையில் இருக்கிற கைதிகளுக்கு வெளியில் நடக்கிற நிகழ்ச்சிகள் தெரியக்கூடாது என்று கறுப்பு மை அடித்துப் பத்திரிகைகளைக் கொடுக்கலாம். ஆனால் மாலையில் ஆல் இந்தியா ரேடியோ செய்திகளைச் சொல்லி விடுகிறதே, அதையும் தடுத்துவிடுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு பழைய கருத்தைச் சொன்னேன். அரசியல் கைதிகளுக்கு இதுபோல வெளி நிகழ்ச்சிகள் தெரிந்தால் கெடுதி ஏற்படும் என்று இந்த அரசாங்கம் பயப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : 1967-க்கு முன்னால் சிறைச்சாலையில் 'முரசொலி', 'மன்றம்', 'நம் நாடு' போன்ற பத்திரிகைகள் தரப்படுவதில்லை. அவற்றை வாங்கித் தருவதற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட கட்டுப்பாடு முதலில் இருந்தது. நாங்கள் பொறுப்பேற்றவுடன் அந்தக் கட்டுப்பாடுகளை எல்லாம் எடுத்து விட்டோம். மேலும் குறிப்பிட்ட வேறு சில பத்திரிகைகள் வேண்டுமென்றாலும் அவற்றை கைதிகளுடைய செலவிலேயே வாங்கிக் கொடுக்க முடிவு செய்திருக்கிறோம்.